(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 5(1).]

# பாராளுமன்றம்

## 5 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2016 திசெம்பர் 16, வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

## திகதி குறிக்கப்படாத பிரேரணை முன்னறிவித்தல்

பா. 188/ '16

கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி

கௌரவ லக்ஷ்மன் ஆனந்த விஜேமான்ன

கௌரவ அ. அரவிந்த் குமார்

கௌரவ சந்தித் சமரசிங்க

கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க

கௌரவ கே.கே. பியதாஸ

கௌரவ சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ அனுர சிட்னி ஜயரத்ன

கௌரவ ஜே.சீ. அலவத்துவல

கௌரவ ஆனந்த அலுத்கமகே

கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி

கௌரவ நலின் பண்டார ஜயமஹ

கௌரவ வடிவேல் சுரேஷ்

கௌரவ மயந்த திசாநாயக்க

கௌரவ எம்.ஏ. சுமந்திரன்

கௌரவ மயில்வாகனம் திலகராஜா

கௌரவ பிமல் ரத்நாயக்க

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— பிரேசில் நாட்டில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் அலுவலகம் மற்றும் ஐக்கிய அமெரிக்கா, நியூயோர்க்கிலுள்ள ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான நிரந்தரப் பிரதிநிதியின் அலுவலகம் என்பவற்றைக் கொள்வனவு செய்வதற்காக இலங்கை மத்திய வங்கிக்கு ஏற்பட்ட செலவுகளை ஒவ்வொரு வளாகம் தொடர்பில் தனித்தனியாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கான தெரிகுழு,—

(அ) பிரேசில் நாட்டில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் அலுவலகம் மற்றும் ஐக்கிய அமெரிக்கா, நியூயோர்க்கிலுள்ள ஐக்கிய நாடுகளின் நிரந்தரப் பிரதிநிதியின் அலுவலகம் என்பவற்றைக் கொள்வனவு செய்வதற்காக இலங்கை மத்திய வங்கிக்கு ஏற்பட்ட செலவுகளை ஒவ்வொரு வளாகம் தொடர்பில் தனித்தனியாகவும்;

(ஆ) இக்கொள்வனவுகள் முறையாக அங்கீகரிக்கப்பட்டனவா என்பதையும்;

(இ) இவ்வளாகங்கள் ஒவ்வொன்றின் மீதும் செலவிடப்பட்ட தொகைகளை வெவ்வேறாகவும்;

(ஈ) இவ்வளாகங்களின் கொள்வனவுகளுக்குப் பொறுப்பான மற்றும்/அல்லது அதற்குப் பணிப்புரை விடுத்த அலுவலர்களின் பெயர்களையும்;

(உ) தமது விசாரணைகளுக்குப் பொருத்தமானதென பாராளுமன்றத் தெரிகுழு கருதும் வேறு எந்த விடயத்தையும்;

ஆராய்வதற்கும் அறிக்கையிடுவதற்கும் பாராளுமன்றத் தெரிகுழுவொன்று நியமிக்கப்பட வேண்டுமென இச்சபை தீர்மானிக்கின்றது.

2. (அ) குழுவும் மற்றும் அதன் தவிசாளரும் கௌரவ சபாநாயகரினால் நியமிக்கப்படுதல் வேண்டும்; மற்றும்

(ஆ) பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளை 95 இன் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் குழு இருபத்தொன்றுக்கு (21) மேற்படாத உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3. குழுவானது,

(அ) அதன் கூட்ட நடபெண்ணை நிர்ணயிப்பதற்கும்;

(ஆ) ஆட்கள், ஆவணங்கள் மற்றும் பதிவுகளைக் கோருவதற்கும், பாராளுமன்றத்தின் முன் அல்லது அத்தகைய குழுவின் முன் தோன்றி தன்வசம் இருக்கும் அல்லது அத்தகைய ஆளின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள ஏதேனும் பத்திரங்கள், புத்தகம், பதிவு அல்லது ஆவணத்தைச் சமர்ப்பிக்குமாறு எந்தவொரு ஆளுக்கும் பணிப்பு விடுப்பதற்கும்;

(இ) சாட்சிகளை வாய்மூல விசாரணையின் மூலம் உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் அல்லது வேறு வழிகளில் நிச்சயப்படுத்திக் கொள்வதற்கும் குழுவின் தவிசாளர் அல்லது அந்நோக்கத்திற்காக விசேடமாக அதிகாரமளிக்கப்பட்ட ஆளினால் மேற்கொள்ளப்படுகின்றவாறு சத்தியப்பிரமாணம் அல்லது உறுதிப்பிரமாணத்தின் பிரகாரம் சாட்சிகளை விசாரிப்பதற்கும்;

(ஈ) குழுவுக்கு உதவி வழங்குவதற்காக தொடர்புடைய துறைகளில் விசேடத்துவம் பெற்றவர்கள் மற்றும் நிபுணத்துவம் பெற்றவர்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கும்; மற்றும்

(உ) பாராளுமன்றத்தின் ஏதேனும் ஒத்திவைப்பினால் தடைப்படாது காலத்திற்குக் காலம் அமர்வுகளை நடத்தி இடைக்கால அறிக்கைகளைத் தயாரிப்பதற்கும் அமர்வுகளை நடத்துவதற்கும்;

தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4. குழு அதன் முதலாவது அமர்வுத் திகதியிலிருந்து ஆறு (06) மாத காலத்திற்குள் அல்லது பாராளுமன்றத்தால் வழங்கப்படக்கூடிய அத்தகைய வேறு அல்லது மேலதிக காலப்பகுதிக்குள் அதன் அறிக்கையைச் சமர்ப்பித்தல் வேண்டும்.